# MIN ALAI

# மின் அலை

October 2024 Volume : 12 Issue 10 Price Rs. 18.00/- Ann. Sub. Rs. 216/-



மாண்புமிகு மின்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு.V.செந்தில் பாலாஜி அவர்களை சந்தித்து பொறியாளர் சங்கத்தின் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.



**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
| --- | --- | --- |
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் தஞ்சை மண்டலத்தின் சார்பில் தஞ்சாவூரில் 28.09.2024 அன்று இளைய பொறியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்பு. (Skills Development Training Program)









ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்

| Page | Contents |
|---|---|
| 07 | Our Representation |
| 07 | Board Order |
| 09 | திறன் மேம்பாட்டு பயிற்சி |
| 15 | ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் 3வது மாநில பொதுக்குழு கூட்டம் |
| 20 | ரத்தன் டாடா |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 12 அக்டோபர் 2024 இதழ் 10

## திட்டம்.... செயல்.... வெற்றி....!!!

பருவநிலை மோசமானால் பாதிக்கப்படும் மக்களுக்கு உணவிற்குப் பிறகு அத்தியாவசிய பட்டியலில் இடம் பெறுவது மின்சாரமே!

அதிக அளவில் சேதப்படுவது மரங்களுக்கு அடுத்தபடியாக மின் கட்டமைப்புகளே!

மின்வாரியத்தின் சிறப்பான பணி பல்வேறு பேரிடர் காலகட்டங்களில் நிரூபிக்கப்பட்டு வந்துள்ளது போல, இந்த அக்டோபர் மாதத்தில் கொட்டித் தீர்த்த வடகிழக்கு பருவ மழையின் பேரிடர் நிலையில் மின்வாரிய பொறியாளர்களும் பணியாளர்களும் real time சீரமைப்புப் பணியில் ஈடுபட்டு பேரிடரை எதிர்கொண்டது அனைவராலும் பாராட்டப்படுகிறது. ‘‘முன்கள பணியாளர்கள்" என அறிவிக்கப்படாத நிலையிலும் கூட காவலர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு இணையாக முன்கள பணியாற்றி பெருமை சேர்த்தவர்கள் மின்வாரிய ஊழியர்கள் ஆவர். தங்கு தடையின்றி மின்விநியோகம் செய்தது மட்டுமல்லாமல் உயிரிழப்பு ஏதும் இல்லாமலும் குழப்பமான குறுக்கும், நெடுக்குமான மின்வாரிய கட்டமைப்புகளுக்கும் எவ்வித சேதாரமும் இல்லாமல் பேரிடரை மின்வாரியம் எதிர்கொண்டுள்ளது. மின்வாரிய ஊழியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். பொறியாளர் சங்கம் அனைத்து பணியாளர்களையும் பொறியாளர்களையும் பாராட்டுகிறது.

But it is high time to define and design ourself.

எதார்த்த கள நிலவரத்தில் பேரிடர் மேலாண்மைக்கு மட்டுமல்ல; தினசரி இயங்கு நிலையில் கூட பல புயல்களை பிரிவு அலுவலகங்கள் சந்தித்து வருகின்றன.

பிரிவுப் பொறியாளர் என்ற ஒரு தனி நபரை மட்டுமே தாக்குகின்ற, பொறுப்பு ஏற்க உத்தரவிடும் ஆணைகள்தான் மின்வாரிய நிர்வாகத்தால் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

பிரிவுப் பொறியாளர் ஓர் ஆணையைப் பெற்று அதை உள்வாங்கிக் கொள்வதற்கு முன்னதாகவே

அடுத்த மேல் ஆணை வந்து விடுகிறது. அதிகரித்து வரும் துறை சார்ந்த / சாராத மின்விபத்துகளுக்கும், பிரிவுப் பொறியாளர்களை குற்றஞ்சாட்டுவது பிரிவுப் பொறியாளர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

Men-Material-Money– என்ற தேவைகளின் அடிப்படையிலும் "இருப்பு மேலாண்மை இயக்கம்" என்ற செயல்பாட்டின் அடிப்படையிலும் பிரிவு அலுவலகங்கள் பரிதாபத்துடன் கையறு நிலையில் உள்ளன. இந்த சோகமான நிலையில் கூட மின்வாரியப் பணி பொதுமக்களால் பாராட்டப்படுகின்ற சூழல் அமைவதற்குக் காரணம், மின்வாரிய ஊழியர்களின் பொதுத்துறை நிறுவனம் என்ற சிந்தனை, தோற்றுவிக்கின்ற "சேவை மனப்பான்மை" தான் காரணமாகிறது. மின்வாரியத்தில் பல நிலைகளில் ஒப்பந்த முறை நியமிக்கப்பட்டு வருகிற சூழலில் கூட "பொதுத்துறை" என்ற உயிர் துடிப்புதான் பொதுமக்களுக்கான சேவையை உறுதிப்படுத்தி வருகிறது.

மின்வாரியத்தின் supply chain management இன்னும் கூடுதலாக நவீனப்படுத்தப்பட வேண்டும்.

சமீபத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் ஒரு விவசாயி கேட்டார் – ஒரு மாதத்திற்கு எத்தனை மின்மாற்றிகள் பழுதாகின்றன என்பதை கணக்கிட்டு 25–30 மின்மாற்றிகளை reserve ஆக வாங்கி வைத்து மின்மாற்றி பழுதான சில மணி நேரங்களிலேயே புதிய மின் மாற்றியை வைத்து விட வேண்டியதுதானே? என்பதுதான் அவருடைய கேள்வி? ஆனால் இன்றைய சூழ்நிலையில் சாதாரண அவசிய தேவையான பொருட்களை கூட மின்வாரிய நிர்வாகம் பிரிவு அலுவலகங்களுக்கு சரிவர கொடுக்க முடியாத நிலையில் விவசாயியின் கேள்வியை "வெயில் அடித்துக் கொண்டே மழை வருவதை போல" சிந்தித்துக் (சிரித்துக்) கொண்டே கேட்க வேண்டியதாயிற்று.

ERPயில் உள்ள "இருப்பு மேலாண்மை இயக்கம்" செயல்பாடுகளை கள நிலவரத்திற்கேற்ப அறிவியல் பூர்வமாக பயன்படுத்த வேண்டும்... ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்களை மதித்து மனிதவள மேலாண்மை மேம்படுத்தப்பட வேண்டும்– எல்லாவற்றிற்கும் ஊடே சேவை மனப்பான்மை என்ற உயிரோட்டம் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். "பொதுத்துறை" என்ற கட்டமைப்புதான் மக்கள் சேவைக்கும், பேரிடர் மேலாண்மைக்கும் உகந்தது என்ற புரிதல் வேண்டும். சிந்திப்பார்களா!!!

**இந்தியாவில் 500 மெ.வா. மின்கல சேமிப்பு திட்டங்கள் :**

இந்திய சூரியஒளி மின்சக்தி உற்பத்தி நிறுவனம் 500 மெ.வா. திறனுள்ள 2 மின்கல சேமிப்பு அமைப்புகளை உருவாக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரியது. இதில் 500 மெ.வா. மின்கல சேமிப்பு அமைப்புகள் நிறுவ ரிலையன்சு நிறுவனம் ஒப்பந்தத்தை பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தம் ரிலையன்சு நிறுவனமே உருவாக்கி உரிமை பெற்று இயக்கும் வகைக்கு வழி செய்கிறது. ரிலையன்சு நிறுவனம் புதுப்பிக்கத்தக்க வளங்கள் துறையில் முக்கியமான ஒரு பணியை பெற்றிருப்பதாக அதன் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்த மின்கல சேமிப்பு அமைப்புகள் தேவையான நேரத்தில் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்படும். 1 மாதத்திற்கு 1 மெ.வா. மின்கல சேமிப்பிலிருந்து மின் சக்தி அளிக்க 3.82 லட்ச ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். இதுவரை அளிக்கப்பட்ட ஒப்பந்தங்களில், இந்த கட்டணம் குறைவானது என அதிகாரிகள் தெரிவித்தனர். ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பதேகர், 400 கி.வா. மின் நிலையத்தில் மின்சக்தி அளிக்க வேண்டும். மின்சக்தி வாங்கும் ஒப்பந்தம் செய்து கொண்ட 24 மாதங்களுக்குள் முழுதிறன் கொண்ட அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

- ET Energy World

## பொதுச் செயலாளர் கடிதம்



தமிழகம் எங்கும் வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளதைத் தொடர்ந்து சவால் மிகுந்த மழைக்கால மின்விநியோகப் பணிகளை எவ்வித இடர்பாடுகளும், சேதமும் இன்றி மிகுந்த பாதுகாப்புடனும் எச்சரிக்கையுடனும் எதிர்கொண்டு பணியாற்றி வரும் அனைத்து பொறியாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மின்சாரதுறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றுள்ள திரு.V.செந்தில் பாலாஜி அவர்களை, பொறியாளர் சங்கத்தின் சார்பில் நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கடந்த 04.10.2024 அன்று, மின்சார வாரியத்திற்கு புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.K.நந்தகுமார், இ.ஆ.ப., அவர்களை, சங்கத்தின் சார்பில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளிலும், பேரிடர் காலங்களிலும் மின்சார வாரியத்தை தனது மேம்பட்ட நிர்வாகத் திறமையால் சிறப்பாக வழிநடத்தி, நமது உறுப்பினர்களின் பதவி உயர்வுகளை தடையின்றி வழங்கி, பல்வேறு சாதனைகள் நிகழ்த்திய முன்னாள் வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்களுக்கு நன்றியுடன் பிரியாவிடை அளித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

நமது நிறுவனங்களில், ஒன்பது இயக்குனர் பதவிகளில் புதிகாக பணியேற்றுள்ள அனைவரையும் பொறியாளர் சங்கத்தின் சார்பில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து தலைமைப் பொறியாளர்கள் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது தலைமையகத்தில் பணியேற்பு செய்துள்ள தலைமைப் பொறியாளர்களை சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

கள்ளகுறிச்சி கிளையின் செயலாளர் பொர்.மு.ரங்கசாமி அவர்கள் வாரியப் பணியில் இருந்து 30.09.2024 அன்று ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அவருக்கு திருவண்ணாமலை மண்டல அளவில் 06.10.2024 அன்று பணி பாராட்டுவிழா கள்ளக்குறிச்சியில் சிறப்பாக நடைபெற்றது.

திருவண்ணாமலை கிளையின் சிறப்பு செயற்குழு கூட்டம் 05.10.2024 அன்று நடைபெற்றது. செயற்குழுவில் என்னுடன் பொதுப் பொருளாளரும் கலந்து கொண்டார். கூட்டத்தில் 40க்கும் மேலான பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டது சிறப்பு.

தஞ்சை மண்டலத்தின் சார்பாக 28.09.2024 அன்று பிரிவு பொறியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்பு சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. தலைமைப் பொறியாளர்/ தஞ்சை அவர்கள் கலந்துக் கொண்டு துவக்கிவைத்தார்கள்.

நீண்டகால நீதிமன்ற போராட்டங்களுக்குப் பிறகு, 06.09.2024 அன்று, தீர்ப்பளிக்கப்பட்ட 2000 மற்றும் 2002–ம் ஆண்டு பணியேற்பு செய்த உதவி பொறியாளர்களின் முன்னுரிமை சம்பந்தமான வழக்கின், எழுத்துப்பூர்வமான உத்தரவு 01.10.2024 அன்று வெளியாகியுள்ளது. தீர்ப்பில் முக்கிய அம்சமாக 2000–ம் ஆண்டு மற்றும் 2002–ம் ஆண்டு பணியேற்பு செய்த அனைத்து நேரடி நியமனம் மற்றும் உள்முகத் தேர்வு உதவி பொறியாளர்களுக்கும் 2002–ம் ஆண்டில் முன்னுரிமை பட்டியல் தயார் செய்ய பணியமைப்பு நிர்வாகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கடந்த 05.10.2024 அன்று சங்கத்தின் சார்பில் வாரியத்தலைவர் மற்றும் பணியமைப்பு நிர்வாகத்திடம் திருத்தப்பட்ட முன்னுரிமை பட்டியல் விரைந்து வெளியிட்டு, செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்விற்கு பட்டியல் கோர உரிய நடவடிக்கை மேற்கொள்ள முறையீடு செய்யப்பட்டுள்ளது.

பொறியாளர் சங்கத்தின் நீண்ட கால தொடர் முறையீடுகளின் பயனாக கடந்த 09.10.2024 அன்று இளநிலைப் பொறியாளர்/ மின்னியல் முதல் நிலை பதவி உயர்விற்கான 316 இளநிலைப் பொறியாளர் / இரண்டாம் நிலை பொறியாளர்களின் தகுதிகாண் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளது.

மின்வாரியத்தில் 1400க்கும் அதிகமான பிரிவு பொறியாளர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், மிக சொற்ப எண்ணிக்கையில் 316 பொறியாளர்களுக்கு மட்டுமே பதவி உயர்வு பட்டியல் கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள முன்னுரிமை பட்டியலில் விடுபட்ட மீதமுள்ள 296 நபர்களுக்கும் பதவி உயர்வு வழங்க ஏதுவாக கூடுதல் பட்டியல் call for செய்ய பணியமைப்பு நிர்வாகத்தினை வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து இளநிலைப்பொறியாளர்/ மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்விற்கான தகவல்கள் முழுமையாக கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், DPC நடவடிக்கைகளை விரைவுப்படுத்திட உரிய முறையீடுகள் செய்யப்பட்டுள்ளது.

இளநிலைப்பொறியாளர்/ முதல் நிலை இயந்திரவியல் பதவி உயர்வுக்கு தடை உத்தரவு நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கினை விரைந்து முடித்திட வாரியத்தில் பணியமைப்பு நிர்வாகத்திடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுவருகிறது. நமது வழக்கறிஞர் மூலமாகவும் வழக்கு விரைந்து விசாரணைக்கு பட்டியலிட, உயர்நீதிமன்றத்தில் உரிய முறையீடு அளிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விண்ணப்பங்களில் உள்ள திருத்தங்களை சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. விடுபட்ட மற்றும் கூடுதல் ஆவணங்கள் குறித்து மேற்பார்வைப் பொறியாளர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டு வருகிறது. கோரப்பட்டுள்ள தகவல்கள் தலைமையகத்திற்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுகிறேன்.

உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்விற்கான DPC நடவடிக்கைகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்கின் தடையுத்தரவை நீக்கிட தொடர்ந்து பணியமைப்பு நிர்வாகத்தை வலியுறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து வழக்குக் கடந்த மாதம் இருமுறை விசாரணைக்கு பட்டியலிட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து விசாரணைக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உதவி பொறியாளர் / மின்னியல் மற்றும் இயந்திரவியல் உள்முகத்தேர்வினை எதிர்த்து, இடைக்காலத்தடை உத்தரவு வழங்கிட கோரி தனிநபர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளில், பொறியாளர் சங்கம் தன்னையும் இணைத்து கொண்டுள்ளது. இதன் மூலம் உள்முகத் தேர்விற்கு தடையுத்தரவு கோரும் வெளிநபர்களின் நோக்கத்தினை முறியடிக்க உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. வழக்கு வரும் 4.11.2024 அன்று விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர்/ இயந்திரவியல் பதவி உயர்வுக்கான DPC நடவடிக்கைகள் முழுமை பெற்றுள்ளன. வரும் மழைக்காலங்களில் கவனத்துடனும், பாதுகாப்பு நடைமுறைகளை பணியாளர்கள் கடைப்பிடிப்பதை உறுதி செய்து சிறப்பான சேவையைத் தொடர்ந்திட அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

# OUR REPRESENTATION

To
**THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR,**
TNPDCL, Chennai-600 002.
Lr.No.GS/TNEBES/F1/D.05/ 2024, Dt.05.10.2024
Respected Sir,

Sub: Revision of seniority in the category of Assistant Engineer / Electrical as per Court Judgment – requested regarding.

Ref: Honorable High Court of Madras Judgment; Dated: 06.09.2024 in W.A. Nos.2093, 2094, 2095, 2685, 2686 of 2010 & 1443 & 1444 of 2018.

Dispute arose between the Direct Recruitee and Internally selected candidates in the category of Assistant Engineer / Electrical appointed during the year 2000 / 2001 and 2002 respectively. Arrival of seniority for these candidates has been a dispute and languishing in the Honorable High Court of Madras since then.

A decade ago during the promotion of Assistant Executive Engineer for these candidates, the Honorable High Court of Madras had delivered a Judgment which was effected in the Board. Writ appeal filed against this Judgment has been heard upon and judgment delivered on 06.09.2024.

As per the Judgment the already issued Seniority needs to be revised and followed in the Board. Particulars has been called for Executive Engineer / Electrical promotions prior to this Judgment which needs to be recalled.

Hence we request the respected Chairman cum Managing to instruct to revise the seniority of the Assistant Engineer / Electrical appointed during the year 2000/2001 and 2002 candidates as per the Judgment of the Honorable High Court of Madras and make fresh call to the promotion of Executive Engineer / Electrical at the earliest and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**(V.S.SAMPATH KUMAR)**
General Secretary.

Encl: Judgment copy

# BOARD ORDER

## TNPDCL

Promotions:-

**JE-II Gr to JE-I Gr Electrical suitability report called for 316 Engineers.**

Ref: Letter No. Letter No.0412144 / G3 / G31 / 2024-3, Dated :09.10.2024.

| Sl. No | | Name | D.O.B | PRESENT CIRCLE |
|---|---|---|---|---|
| 1 | 12086886 | Balavinayagar.G | 05.05.1966 | Madurai EDC |
| 2 | 12046910 | Santhi.c | 11.12.1965 | Trichy EDC/ Metro |
| | | - - - - - - | | |
| 316 | 12081891 | Sasirekha.S | 18.08.1988 | Tirunelveli EDC |

Crucial date : 25.03.2024
Last date for sending particulars : 30.10.2024

**ABSTRACT**

Energy Department -Establishment - Appointment to the post of Directors in Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL), Tamil Nadu Power Generation Corporation Limited (TNPGCL),Tamil Nadu Green Energy Corporation Limited (TNGECL) and Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) - Orders - Issued.

**ENERGY (B2) DEPARTMENT**

G.O(Ms.)No.101 Dated: 18.10.2024 குரோதி வருடம், ஐப்பசி 1 திருவள்ளுவர் ஆண்டு 2055

Read:

1. G.O((Ms.)No.6, Energy (B2) Department, Dated 24.01.2024.
2. G.O((Ms.)No.7, Energy (B2) Department, Dated 24.01.2024.
3. From the Chairman cum Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited Letter No. 16624/A7/A71/2024-4, dated 08.10.2024.

ORDER:

1. In the Government Order first read above, the Government have issued orders for restructuring of Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) into separate generation and distribution companies and formation of Thermal Generation Company in the name of Tamil Nadu Power Generation Corporation Limited (TNPGCL) under the Companies Act, 2013.

2. In the Government Order second read above, the Government have issued orders for formation of Tamil Nadu Green Energy Corporation Limited (TNGECL) under the Companies Act, 2013 by integrating Renewable Energy Wing of TANGEDCO and merge of Tamil Nadu Energy Development Agency (TEDA) with the new company.

3. In the letter third read above, the Chairman and Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited has sent proposal for appointment to the post of Directors in Tamil Nadu Power Distribution Corporation Limited, Tamil Nadu Power Generation Corporation Limited, Tamil Nadu Green Energy Corporation Limited and Tamil Nadu Transmission Corporation Limited.

4. The Government, after careful examination, have decided to accept the proposal of the Chairman and Managing Director, Tamil Nadu Power Distribution Corporation Limited in paragraph 3 above and accordingly appoint the following officials as Directors in Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL), Tamil Nadu Power Generation Corporation Limited (TNPGCL), Tamil Nadu Green Energy Corporation Limited (TNGECL) and Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) as indicated below with immediate effect:-

| Sl.No. | Name & Designation Thiruvalargal | Appointed as |
|---|---|---|
| 1. | K.INDIRANI, Chief Engineer, Planning & Resource Centre, Chennai. | Managing Director, TANTRANSCO (Tamil Nadu Transmission Corporation Limited) |
| 2. | S.LAKSHMI,Chief Engineer, Materials Management, Chennai. | Director, Operation, TANTRANSCO (Tamil Nadu Transmission Corporation Limited) |
| 3. | P.CHANDRASEKARAN, Chief Engineer, Distribution, Kanchipuram Region | Director/Transmission Projects TANTRANSCO (Tamil Nadu Transmission Corporation Limited) |
| 4. | R.K.VINOTHAN, Chief Engineerl Non Conventional Energy Sources/Chennai. | Director, Technical TNGECL (Tamil Nadu Green Energy Corporation Limited) |
| 5. | M. SENTHIL KUMAR, Chief Engineer, MTPS-II | Director, Technical, TNPGCL (Tamil Nadu Power Generation Corporation Limited) |
| 6. | K.KARUKKUVEL RAJAN, CE/ PPP/ Chennai | Director/Projects, TNPGCL (Tamil Nadu Power Generation Corporation Limited) |
| 7. | A.R. MASCURNAS, Chief Engineer, Distribution, Chennai North Region | Director, Distribution, TNPDCL (Tamil Nadu Power Distribution Corporation Limited) |
| 8. | B. RAJESHWARI Chief Financial Controller, Regulatory Cell | Director (Finance), TNGECL (Tamil Nadu Green Energy Corporation Limited) |
| 9. | K. BALAKRISHNAN, Chief Financial Controller, General, | Director (Finance), TNPGCL (Tamil Nadu Power Generation Corporation Limited) |

(BY ORDER OF THE GOVERNOR)

BEELA VENKATESAN,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

## திறன் மேம்பாட்டு பயிற்சி

பொறியாளர் சங்கம் தஞ்சை மண்டலத்தின் சார்பில் தஞ்சாவூரில் கடந்த 28.09.2024 அன்று இளைய பொறியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்பு (Skills Development Training Program) நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாநிலத் தலைவர் பொர்.A.அந்தோனி படோவராஜ், தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக தஞ்சாவூர் தலைமைப் பொறியாளர் பொர்.S.கிருஷ்ணவேணி அவர்கள் கலந்துக்கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாநிலத் துணைத் தலைவர் பொர்.R.சுந்தர்ராஜ், வரவேற்புரை ஆற்றினார், தஞ்சை மண்டலச் செயலாளர் பொர்.P.சுந்தர் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய மாநில தலைவர் அவர்கள், இந்த ஒரு நாள் பயிற்சி, பொறியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பொறியாளர் சங்கம், உறுப்பினர் நலன் காக்க போராடும் சங்கமாக மட்டுமல்ல, அது தன் உறுப்பினர்களின் திறமைகளை வளர்க்கும் சங்கமாக எப்போதும் திகழ்கிறது என்பதற்கு இந்த பயிற்சி ஒரு எடுத்துக்காட்டு, இந்த பயிற்சியை அனைத்து மண்டலங்களிலும் நடத்த வேண்டும் என்று கூறினார்.

நிகழ்ச்சியை குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து பேசிய தஞ்சை தலைமைப் பொறியாளர், பொர்.S.கிருஷ்ணவேணி அவர்கள் பேசும்போது, தற்போதைய இந்த பயிற்சி பொறியாளர்களுக்கு மிகவும் அவசியமானது, பொறியாளர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டால் தான் தற்போதைய சூழலில் சிறப்பாக செயல்பட முடியும் எனவே இந்த பயிற்சியை அனைவரும் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ந்து பேசிய மாநில அமைப்புச் செயலாளர் முனைவர்.சா.சம்பத் அவர்கள் இப்போது பொறியாளர்கள் ஒரு மேலாளராக, நேர்மறை சிந்தனையாளராக, நேரத்தை சரியாக நிர்வகிக்க கூடியவராக, சிறந்த தொடர்பாற்றல் உள்ளவராக, எதனையும் சமாளிக்கும் வேளையில் மன அழுத்தத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கலைகள் தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பதற்காக சங்கம் இந்த பயிற்சியினை வடிவமைத்துள்ளது, இது பொறியாளர்கள் திறனை மேலும் மேம்படுத்தும் என்பது உறுதி என்றார்.

தொடர்ந்து பயிற்சிகள் நான்கு தலைப்புகளில் நடைபெற்றது.

நேர்மறை சிந்தனை, மன அழுத்த மேலாண்மை ஆகிய தலைப்புகளில் தேசிய பயிற்சியாளர் முனைவர் சா.சம்பத் அவர்களும், நேர நிர்வாகம், தொடர்பாற்றல் ஆகிய தலைப்புகளில் மண்டல பயிற்சியாளர் திரு.நா.மாமலைவாசன் அவர்களும் பயிற்சி அளித்தனர்.

பயிற்சி நாள் முழுவதும் உற்சாகம் குறையாமல் நடைபெற்றது. சிரிப்பு, சிந்தனை, போட்டிகள், நெகிழ்ச்சி, ரிலாக்ஸ் என அனைத்தும் உளவியல் ரீதியாக நடைபெற்றது.

பங்கேற்பாளர்கள் நெகிழ்ச்சியுடன் பயிற்சி பற்றி கருத்துக்கள் கூறியது, நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாய் இருந்தது. முடிவில் மாநில தலைவர் அவர்கள் உறுப்பினர்களுக்கு சங்க செயல்பாட்டை விளக்கினார்.

நிகழ்ச்சியின் முடிவில் தஞ்சை கிளைச் செயலாளர் பொர்.கு.பிரபாகரன் அவர்கள் நன்றி கூற, நாட்டுப்பண் பாடி நிகழ்ச்சி நிறைவுற்றது.

## SKILLS DEVELOPMENT TRANING PROGRAM FEEDBACKS.

Thank you TNEBES for organizing such a valuable skill development program. We truly respect your efforts, we feel fortunate to have attended this session at the right time in our journey. This day have made a significant "feel good" impact for every one of us.

Best regards, Er.U.MURUGADAS. JE-II/Kovilvenni SS.
Thiruvarur Circle. 9445116394.

Today 28.09.2024 the event for young Engineers was held @Tanjavur Rotary hall on behalf of TNEBES, Thanjavur Region. 4 Nagai branch engineers including myself participated in the event. CE/D/ Thanjavur participated in the Inaugural Function and congratulated our Sangam. The event was presided over by our state president. I would like to express my gratitude to SVP (Electrical), RS (Tnj) and all the office bearers of Tanjore for organizing the event with a pleasant venue and delicious food.

Thanks to our OS Dr.Sambath sir and resource person Mr.Maamalaivasan who gave us ideas throughout the day on topics including positive attitude, time management, effective communication Skills.

(especialy that Song with Dance.. ஒருகை ஒருகை ஆடியதே)

வாழ்க பொறியாளர் சங்கம்! வளர்க தஞ்சை மண்டலம்!
Er.G.ELAYABHARATHI. Branch Treasurer. Nagai Branch. 9578960547.

28.09.2024 very very useful day and wonderful memorable day in my life....... Thanks to Namma Sangam and Thanks to all.

Er.B.VARALAKSHMI. JE-II/Thiruvarur SS.
Thiruvarur Circle. 9750697970.

Enjoyed the program and games, very useful mind free thanks to sangam and thanks to all.

Er.G.RAMYA. JE-II/Thiruvarur SS. Thiruvarur Circle. 8760858915.

I want to extend my heartfelt thanks for the skill development training program that I attended yesterday. The insights and knowledge shared were valuable and will greatly enhance my work.

Er.S.VENKATESAN. AE/O&M/Kudavasal. Thiruvarur Circle. 9600720039.

This program will be very useful in my career. Yesterday i had wonderful experience and lot of fun & enjoyment. Thanks for this opportunity, given to me Thanks to sangam and crew members.

Er.S.MADHUMISHA. TA/MRT/Thiruvarur. Thiruvarur Circle. 6379998701.

I sincerely convey my gratitude to our organizing secretary & background crew. That is why skill development programme as grand success.

Er.S.SAMIVEL. AE/ELE.KGTPS. Nagai Branch. 9940612867.

நேற்றையநாளில் மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கிய பொறியாளர்கள் அனைவருக்கும் நன்றி. இந்த அரியவாய்ப்பை வழங்கிய பொறியாளர் முனைவர் சம்பத் மற்றும் மின்வாரிய பொறியாளர் சங்கம் ஆகியோருக்கும் என் உளப்பூர்வமான நன்றி,

திரு.மாமலைவாசன் மன்னார்குடி

கள்ளகுறிச்சி கிளையின் செயலாளர் பொர். மு.ரங்கசாமி, அவர்கள் வாரியப்பணியில் இருந்து 30.09.2024 ஓய்வு பெற்றதை தொடர்ந்து 06.10.2024 அன்று திருவண்ணாமலை மண்டலத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழா






திருவண்ணாமலை கிளை செயற்குழு கூட்டம் 05.10.2024 அன்று மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில பொது செயலாளர் மற்றும் மாநில பொது பொருளாளர் ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.



## வாரியத்தில் பதவி உயர்வில் பொறுப்பேற்றுள்ள இயக்குனர்களுக்கு பொறி


Er.K.Indirani / Managing Director / TANTRANSCO


Er.P.Chandrasekaran / Director


Er.A.R. Mascurnas / Director Distribution/ TNPDCL


Er.R.K.Vinothan / Direct


Er.M. Senthil Kumar / Director Technical / TNPGCL


Er.K.Karukkuvel Rajan / D

யாளர் சங்கத்தின் சார்பில் 21.10.2024 அன்று வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.



Transmission / TANTRANSCO



Er.S.Lakshmi / Director Operation / TANTRANSCO



tor Technical / TNGECL



Shri.B.Rajeshwari / Director Finance / TNGECL



irector Projects / TNPGCL



Mr.K. Balakrishnan / Director Finance / TNPGCL

**தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் 3வது மாநில பொதுக் குழு கூட்டம் 28.09.2024 அன்று சென்னை, இராயப்பேட்டை, பொறியாளர் சங்க பொன்விழா கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது.**













## ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் 3வது மாநில பொதுக் குழு கூட்டம்

ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் 3வது மாநில பொதுக் குழு கூட்டம் 28.09.2024–ல் சென்னை, இராயப்பேட்டை, பொறியாளர் சங்க பொன் விழா கட்டிடத்தில் நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பொர்.G.முரளிகிருஷ்ணன், அமைப்பு செயலாளர் அவர்கள் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார்.

தொடர்ந்து கடந்த ஆண்டில் மறைந்த பொறியாளர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது, அதனை தொடர்ந்து உறுப்பினர்கள் அறிமுகம் செய்து கொண்டனர்.

பொர்.S.ஜெயசிங்ராஜா மாநிலத் தலைவர் அவர்கள் தனது தலைமை உரையில் பல வருடங்களாக கிடப்பில் போடப்பட்டிருந்த முத்தரப்பு ஒப்பந்தம், இந்த வருடம் 12.02.2024 அன்று நிறைவேறியுள்ளது பற்றி விவரமாக தெரிவித்தார், மேலும் வரலாற்று சிறப்புமிக்க இந்த ஒப்பந்தத்தில் நாமும் ஒரு அங்கமாக இருந்து கையொப்பம் இட்டத்தையும், நமது சங்கம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதையும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

அனைத்து மண்டலங்களிலும் நேரடியாக கூட்டங்கள் நடத்தப்பட்டதையும் உறுப்பினர்களின் சிறந்த பங்களிப்பு பற்றியும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

NHIS குறித்து வாரியத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துக் கொண்டு சங்கத்தின் சார்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது குறித்தும், நிலுவையில் இருந்த Bill–க்கு பணம் பெற்ற விவரங்களையும் தெரிவித்தார்.

பொறியாளர் சங்கம் அறிவிக்கும் அனைத்து நடவடிக்கைகளிலும் பொறியாளர் சங்கத்துடன் இணைந்து தலைமையகத்தில் கலந்துக் கொள்ளப்பட்டது என்றும், வட்ட அளவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் TNEBRES பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டு, சிறப்பாக கலந்துக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

நம் சங்கத்தின் நீண்ட நாள் கோரிக்கையான, வாழ்நாள் சான்றிதழ் (Life Certificate) மின்னணு மயமாக்கப்பட்டது மற்றும் பணியாளர்களின் பணி பதிவேடு (SR) விரைவில் மின்னணு மயமாக்கப்படும் என தெரிவித்தார்.

வரும் காலகட்டத்தில் நமது உரிமைகளை காத்து கொள்ள அனைவரும் இணைந்து, நம்மை வலிமைபடுத்திக் கொண்டு செயல்பட கேட்டுக் கொண்டார்.

பொர்.R.வள்ளிராஜன் பொதுச்செயலாளர் தனது அறிக்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பட்டியலிட்டு, ஒவ்வொரு நிகழ்விலும் சிறப்பாக செயல்பட்டு ஒத்துழைத்தவர்களை பாராட்டியும், நன்றி தெரிவித்தும், தெளிவாக அறிக்கையை அளித்து, மண்டலக் கூட்டங்களை சிறப்பாக நடத்திட்ட, மற்றும் ஒத்துழைப்பு நல்கிய பொறுப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், பொறியாளர் சங்க மண்டலப் பொறுப்பாளர்களுக்கும், கிளைப் பொறுப்பாளர்களுக்கும் நன்றியை தெரிவித்தார்.

He congratulated Er.A Antony Padovaraj President / TNEBES, Er.V.S.Sampathkumar GS/TNEBES and all office bearers for their vital role in Tripartite Agreement. He also thanks to Thiru.Rajesh Lakani IAS former CMD for implementing multiple methods for submitting Life certificate and introduction of TNEB Pensioners App.

நம் சங்க உறுப்பினர்களின் விபரங்களை டிஜிட்டல் விண்ணப்பம் மூலம் சேகரிக்க, Google App 2023 பொதுக்குழுவில் அறிமுகப்படுத்தப்பட்டது. நம் உறுப்பினர்கள் அனைவரும் அதில் விபரங்களை பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்திட வட்ட மட்டத்தில் ஒருங்கிணைப்பாளர் பதவியை உருவாக்குவது, வட்ட அளவில் தொடர்ந்து மாதாந்திரக் கூட்டம் நடத்துவதென்றும், சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அடுத்த பொதுக்குழுவிற்கு முன் உயர்த்திட அனைவரும் இணைந்து செயல்பட கேட்டுக்கொண்டார்.

பொர்.S.மணிவாசகன் பொதுப் பொருளாளர் தனது அறிக்கையில் 2022–2023, 2023–2024 நிதி ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையினை தெரிவித்து ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ல் கணக்கு முடிக்கப்பட்டு வருமான வரி படிவங்களும் உரிய காலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார், மேலும் 30 ஆகஸ்ட் 2024 வரையிலான வரவு செலவு கணக்கையும் அறிக்கையில் தெரிவித்தார்.

சங்க வரவில் ஒருபகுதி நிரந்தர வைப்பு நிதியில் "TNPFC"ல் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். வருங்காலத்தில் உறுப்பினர்கள் சங்கத்திற்கு சந்தாவோ, நன்கொடையோ அனுப்பும் போது தங்களது விவரங்களையும் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

அறிக்கைக்கு பின் உறுப்பினர்களின் கருத்து கேட்கப்பட்டது, 19 உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். உறுப்பினர் கருத்துக்களுக்கு பொதுப் பொருளாளர், பொதுச் செயலாளர் பதில் அளித்தபின் பொதுக்குழு அறிக்கைகயை கரவொலி எழுப்பி ஏற்று கொள்ளப்பட்டது.

பொதுக் குழுவில் கலந்துக் கொண்ட பொறியாளர் சங்க பொறுப்பாளர்களுக்கு மரியாதை செய்யப்பட்டது. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பொறியாளர் சங்க பொதுப் பொருளாளர் அவர்களுக்கு TNEBRES அமைப்புப் செயலாளர் அவர்களும், பொறியாளர் சங்க பொதுச்செயலாளர் அவர்களுக்கு TNEBRES பொதுச்செயலாளர் அவர்களும் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்கள்.

அதன் பின், பொர்.N.R.செந்தில் பொறியாளர் சங்க பொதுப் பொருளாளர் சிறப்புரையில் சிறப்பாக செயல்படும், ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் பணி வருங்காலத்தில் அவசியம் தேவை என்பதால், சங்கத்தை, அமைப்பு ரீதியாகவும், பொருளாதாரத்திலும் இன்னும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பொர்.V.S.சம்பத்குமார் பொறியாளர் சங்க பொதுச்செயலாளர் சிறப்புரையில் சிறப்பாக செயல்படும் ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தை பாராட்டியும், இன்றைய நிலையில் வாரியம் செயல்பாடு எப்படி உள்ளது என்றும், வரும் காலங்களில் நாம் சந்திக்க போகிற பிரச்சனைகளையும் பட்டியலிட்டார், வரும் காலங்களில் நாம் பெற்று வரும் உரிமைகளை தக்கவைத்துக் கொள்ள அனைவரும் ஒன்றுப்பட்டு செயல்படவேண்டியது அவசியம் என அறிவுறுத்தினார்.

சிறப்புரைக்குப் பின் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு நடைபெற்றது. அதனை தொடர்ந்து கீழ் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள்

1. 70 வயது முடிவடைந்த நமது சங்க உறுப்பினர்களை கௌரவிக்கும் விதமாக அவர்களுக்கு சால்வை அணிவித்து, கேடயம் வழங்கி சிறப்பிக்க இப்பொதுக்குழு ஒப்புதல் வழங்குகிறது.
2. நமது சங்கத்தின் உட்கட்டமைப்பை வலுப்படுத்த, ஒவ்வொரு மாதமும் 2வது அல்லது 4வது சனிக்கிழமை அன்று வட்ட அளவிலான கூட்டங்கள் நடத்த இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
3. நமது சங்கத்தின் புதிய பொறுப்பாளர்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்க இப்பொதுக்குழு ஒப்புதல் வழங்குகிறது.
4. தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு 80 வயதுக்கு மேல் 20 விழுக்காடு ஓய்வூதிய உயர்வு வழங்கபடுவதை மாற்றி, 70 வயதுக்கு மேல் 10 விழுக்காடு உயர்வும், 80 வயதுக்கு மேல் 10 விழுக்காடு உயர்வும் ஓய்வூதியத்தில் உயர்த்தி வழங்க வேண்டும் என்று வாரியத்தையும், தமிழ்நாடு அரசையும் இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
5. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 01.04.2003க்கு பின் பணியில் சேர்ந்த பணியாளர்களுக்கும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று வாரியத்தையும், தமிழ்நாடு அரசையும் இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

இறுதியில் துணை பொதுச்செயலாளர், பொர்.S.கனகவேல் அவர்களின் நன்றியுரைக்குப்பின், நாட்டுப்பன்னுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

பொர்.R.வள்ளிராஜன் / பொதுச்செயலாளர்

## First units installed at Australia's first 2 GWh big battery project

The first battery containers have been installed in what will likely be the country's first 2 gigawatt hour (GWh) battery project being built in the Western Australian coal town of Collie.

The 500 MW/ 2000 MWh Collie battery is being built by state owned until Synergy, using CATL technology, the same that were deployed at the first big battery on the state's grid at Kwinana.

W.A. is seeing a huge burst of battery activity, primarily driven by lucrative contracts designed to soak up excess solar projected by rooftop PV and re-injecting them into the grid in the evening peak.

Synergy's Collie battery is one of two being built in the town, with the other – an even bigger 560 MW, 2240 MWh facility from Neoen, being built over two stages. Synergy expects its $1.6 billion facility to be switched on in 2025. The first 80 of an anticipated 640 battery units are now in place.

The two Collie batteries underline the dramatic switch occurring across Australia's main grid as renewable and storage technologies replace legacy coal generators. W.A.'s main grid expects to close the last of its coal generators at Collie by the end of this decade.

The federal Coalition says it wants to use the sites for one of its proposes nuclear small modular reactors, but the local town is not interested, the transmission capacity will be likely full, and there is no way that the SMRs could be built within a decade of the coal plants' closure.

“The energy transition is powering ahead under our Labor Government, setting up WA's economy for the future,” state premier Roger Cookm said in a statement.

“The Collie battery will be one of the biggest in Australia, and means we can deliver clean, affordable and reliable energy for WA for decades to come.

“Importantly, this big battery keeps Collie at the heart of our energy system, supporting local jobs and ensuring a strong future for the town.”

Energy minister Reece Whitby says the batteries are important to support the investment in rooftop solar by homes and businesses and to phase out coal by 2030.

The state government also announced $134 million in funding from its Collie Industrial Transition Fund to help fast-track large-scale projects in Collie.

The funds will initially be used to support land purchases and road and infrastructure upgrades in local industrial estates, and to support industries such as a training ground for autonomous mining trucks, and water filtration technologies.

“My Government is absolutely committed to delivering a strong future for Collie, delivering major new industries and local jobs as the economy transitions away from coal,” Cook said after visiting the area.

“We're seeing significant interest from exciting industrial projects looking to establish in Collie, with Green Steel of WA and Magnium Australia set to finalise their State-supported feasibility studies in the coming months.

“Everywhere you look in Collie, you can see the Just Transition coming to life – from the southern hemisphere's leading autonomous vehicle training hub to growth in local manufacturing in the light industrial area.”

- by Mr.Giles Parkinson

## மின் ஊழியர்கள் பற்றாக்குறை பொறியாளர்கள் அல்லல்

தமிழகத்தில் மின் ஊழியர்கள் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது. தற்போது பருவமழை காலமாக உள்ளதால் சீரமைப்பு பணிகள் செய்ய முடியாமல் பொறியாளர்கள் திண்டாகின்றனர்.

தமிழக மின்வாரியத்தில் 24 ஆயிரம் கள உதவியாளர், 10 ஆயிரம் வயர்மேன்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன. இதை சரி செய்யாததால் வயர்மேன்கள், கள உதவியாளர்கள், கேங் மேன்கள் என மூவருக்கும் கூடுதல் பணி சுமை உள்ளது. 4–க்கும் மேற்பட்ட பகுதிகளை ஒரே வயர்மேன் பார்க்கிறார். மழை நேரத்தில் மின்தடை ஏற்படும் போது மிகுந்த பாதிப்பு ஏற்படுகிறது. அதாவது ஒரு பகுதியில் மின்தடை சரிசெய்த பின்பே அடுத்த பகுதிகளுக்கு செல்லும் நிலை உள்ளது. இதனால் மக்கள் மின்தடை ஏற்பட்ட பின்னும் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது.

மரக்கிளை முறிவு ஏற்பட்டு மின்தடை ஏற்பட்டிருந்தால் தீயணைப்புத் துறையினர் வந்து மரத்தை அகற்றிவிட்ட பின்னும் மின்ஊழியர்கள் வர தாமதம் ஏற்படுகிறது. அந்தளவுக்கு பற்றாக்குறையால் அங்குமிங்கும் ஓடி அலைகின்றனர். ஒவ்வொரு மழைக்காலம் வரும்போதும் மின் ஊழியர்கள், பொறியாளர்கள் புலம்பி தவிக்கின்றனர். தி.மு.க. அரசு காலிப்பணியிடங்களை நிரப்புவதாக கூறியிருந்தது. ஆனால் தற்போது வரை செய்யவில்லை. இதனால் மக்கள் கடும் சிரமத்தை சந்திக்கும் சூழல் உள்ளது.

பணியாளர் பற்றாக்குறையால் கூடுதல் மன உளைச்சலோடு பணிபுரியும் மின் ஊழியர்கள், கவனக்குறைவால் மின் விபத்துக்கு ஆளாகின்றனர். பலர் மரணமே அடைந்துள்ளனர். இதே நிலையிலான மின் விபத்துகள் தான் புகார்கள் மீது ஏற்படும் தாமதத்தால் நடக்கிறது, பொறியாளர்களும் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர். எனவே இதை உணர்ந்து அரசு விரைந்து மின் ஊழியர்கள் பற்றாக்குறையை சரி செய்ய வேண்டும்.

தினமலர், அக்.12 விருதுநகர்

## காலநிலை மாற்றம்

லண்டன், அக்.1, 142 ஆண்டுகள் பழமையான இங்கிலாந்தின் கடைசி அனல் மின் நிலையம் நேற்று மூடப் பட்டது. காலநிலை மாற்றம் என்பது இன்றைய உலகம் சந்திக்கும் முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனால் புவி வெப்பமயமாதல், அதீத கனமழை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே காலநிலை மாற்றத்துக்கு எதிரான நடவடிக்கை எடுக்க கோரி உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதனால் புதுப்பிக்க இயலாத ஆற்றல் மூலம் மின்சாரம் தயாரிப்பதை குறைத்து, சூரிய ஒளி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலை பயன்படுத்த உலக நாடுகள் முயற்சிக்கின்றன.

அதன்படி வருகிற 2030–ம் ஆண்டுக்குள் அனைத்து ஆற்றலையும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களில் இருந்து பெற இங்கிலாந்து இலக்கு நிர்ணயித்துள்ளது. எனவே தலைநகர் லண்டனில் செயல்படும் ராட்கிளிப் அனல் மின் நிலையத்தை மூட அரசாங்கம் முடிவு செய்தது. இதனையடுத்து 142ஆண்டுகள் பழமைவாய்ந்த இந்த அனல் மின் நிலையம் நேற்றுடன் அதன் பணியை நிறைவு செய்தது.

இதன்மூலம் இங்கிலாந்தில் செயல்பட்டு வந்த கடைசி அனல் மின் நிலையமும் மூடப்பட்டது. இதுகுறித்து இங்கிலாந்தின் எரிசக்தி துறை மந்திரி மைக்கேல் ஷாங்க்ஸ் கூறுகையில், '2030க்குள் நாட்டின் அனைத்து ஆற்றல்களும் புதுப்பிக்கத்தக்க ஆதாரத்தில் இருந்து பெறுவதற்கான முயற்சியில் இது ஒரு மைல்கல் ஆகும்' என பாராட்டு தெரிவித்தார்.

இங்கிலாந்தில் 1990–ம் ஆண்டு நாட்டின் மின் உற்பத்தியில் சுமார் 80 சதவீதம் அனல் மின் நிலையம் மூலமே பெறப்பட்டது. பின்னர் படிப்படியாக குறைந்து கடந்த ஆண்டு மின்சார தேவையில் வெறும் 1 சதவீதம் மட்டுமே அனல் மின் நிலையம் மூலம் பெறப்பட்டது.

தற்போது அங்கு காற்று, சூரிய ஒளி மற்றும் இயற்கை எரிவாயு போன்றவை மூலமே பெருமளவில் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இதன் மூலம் நிலக்கரி பயன்பாட்டை ஒழிக்கும் முதல் பெரிய பொருளாதார நாடாக இங்கிலாந்து மாறி உள்ளது.

### மின்துறைக்கு 9.15 லட்சம் கோடியில் திட்டங்கள்:

இந்தியாவின் மின் கட்டமைப்பு மேம்படுத்தவும், மின்சக்தி தேவையை நிறைவு செய்யவும் 9.15 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் திட்டங்களை நடுவன் அரசு தீட்டியுள்ளது. 2023–2032 ஆண்டுகளுக்கான தேசிய மின் திட்டத்தில் 458 GW உச்சக்கட்ட தேவையை நிறைவு செய்ய மின்பாதை அமைப்புகளை உருவாக்க விரிவான திட்டங்களை வெளியிட்டு உள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் பசுமை ஹைட்ரஜன் ஆகியவற்றில் இருந்து கிடைக்கும் மின்சக்தியை கட்டமைப்பில் இணைக்க அதிக திறன் கொண்ட மின் பாதைகள் தேவை. தற்போது 4.85 லட்சம் சர்க்யூட் கிலோ மீட்டர் மின்பாதை அமைப்புகள், 2032ம் ஆண்டில் 6.48 சர்க்யூட் கிலோ மீட்டராக உயர்த்தப்படும். மின்சக்தி கொண்டு செல்ல 1251 GVAல் இருந்து 2342 GVA ஆக உயர்த்தப்படும். மாநிலங்களுக்கு இடையே சூரியஒளி மின்சக்தியை கொண்டு செல்ல 50GW திறனுள்ள மாநிலங்களுக்கு இடையேயான மின்பாதை அமைப்புகள் உருவாக்கப்படும். 280GW புதுப்பிக்கத்தக்க வளங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை கொண்டு செல்ல இதுவரை 85GW பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 50.9GW திறனுள்ள மின்சக்தியை கொண்டு செல்ல 60,676 கோடி ரூபாய் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு உள்ளது. குஜராத், ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் காற்றாலை, சூரிய மின்சக்தி ஆகியவற்றை கொண்டு செல்ல இந்தப் பாதைகள் பயன்படும். 83,596 மலைவாழ் மக்கள் குடியிருப்புகளுக்கு மின்சக்தி அளிக்கப்பட்டுள்ளது. விவசாய மின் இணைப்புகளுக்கான பாதைகள் தனியாக அமைக்கப்படுகின்றன. நமது நாட்டின் மின்சக்தி அமைப்புகளை பாதிக்கும் கணினி தொழில் நுட்பத்தை தடுக்க CSIRT - POWER என்ற தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மின்சார வாகனங்கள் சார்ஜிங் குறித்த வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த தகவல்களை மத்திய மின்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

தொகுப்பு: பொர்.சா.கண்ணன்/ முன்னாள் மாநில துணை தலைவர்

# ரத்தன் டாடா...



இந்தியாவில் மிகவும் வெற்றிகரமான தொழிலதிபர்களில் ஒருவர். டாடா குழுமத்தை மிகவும் பிரம்மாண்டமாக கட்டமைத்தவர். டாடா நிறுவனத்தை பற்றி... பேச்சு வழக்கில் ஒரு விஷயத்தை அடிக்கடி கூறுவர். வெளிநாட்டில் இருந்து ஒருவர் இந்தியாவிற்கு விமானத்தில் வருகிறார் என்றால் அவர் தரையிறங்குவதற்குள் டாடா நிறுவனத்தின் ஏதேனும் ஒரு பொருளை பயன்படுத்தி இருப்பார். அந்த அளவிற்கு டாடா நிறுவனம் கால் பதிக்காத துறைகளே இல்லை எனலாம்.

1937, டிசம்பர் 28ஆம் தேதி மும்பையில் பிறந்தவர். மிகவும் பணக்கார குடும்பத்தை சேர்ந்தவர். அமெரிக்காவின் கார்னல் பல்கலைக்கழகத்தில் ஆர்கிடெக்சர் மற்றும் ஸ்ட்ரக்சரல் எஞ்சினியரிங் படித்தவர். அமெரிக்காவில் 1955 – 1962 வரை தங்கியிருந்த நிலையில் தொழில் ரீதியாக பல்வேறு விஷயங்களை கற்று கொண்டார்.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலேயே செட்டிலாகி விட நினைத்தவருக்கு, இந்தியாவில் இருந்து வருத்தமூட்டும் செய்தி வந்தது. பாட்டி நவஜ்பாய் டாடாவின் உடல்நிலை மோசமடைந்துவிட்டது. உடனே இந்தியா திரும்ப வேண்டும் என அறிவுறுத்தினர். சிறு வயதில் இருந்து பாட்டியின் அரவணைப்பில் தான் வளர்ந்தவர் என்பது கவனிக்கத்தக்கது.

இந்தியா திரும்பியதும் ஐபிஎம் நிறுவனத்தில் இருந்து வேலைக்கான ஆஃபர் வந்தது. ஆனால் அதை தவிர்த்து விட்டு டாடா இண்டஸ்ட்ரீஸில் 1962ல் வேலைக்கு சேர்கிறார்.

இவர் பதவி வகித்த காலகட்டத்தில் டாடா குழுமத்தின் வருவாய் பல மடங்கு பெருகியது. இதையடுத்து படிப்படியாக பல்வேறு பொறுப்புகளை வகித்தார். டாடா மோட்டார்ஸ், டாடா ஸ்டீல், டிசிஎஸ், டாடா பவர், டாடா குளோபல் பெவரேஜஸ், டாடா கெமிகல்ஸ், இந்தியன் ஓட்டல்ஸ், டாடா டெலி சர்வீசஸ் ஆகியவற்றின் தலைவராக இருந்துள்ளார்.

டாடா சன்ஸ் தலைவராக மார்ச் 1991ல் பொறுப்பேற்றார். கொள்கை உருவாக்கம் முதல் தொழில்நுட்ப வளர்ச்சி வரை ஒவ்வொரு விஷயத்திலும் அளப்பரிய பங்காற்றினார். 1998 ஆம் ஆண்டில், ரத்தன் டாடாவின் தலைமையின் கீழ், டாடா மோட்டார்ஸ் டாடா இண்டிகாவை அறிமுகப்படுத்தியது, இது இந்திய வாகன வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். இது இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட பயணிகள் ஆட்டோமொபைல் ஆகும், இது நாட்டின் வாகனத் தொழிலை மாற்றியது. 2002 இல் VSNL (விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட்) கையகப்படுத்தப்பட்டது, குழுவின் தொலைத்தொடர்பு திறன்களை விரிவுபடுத்தியதன் மூலம், டாடா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திற்கு கதவு திறக்கப்பட்டது. 20 ஆண்டுகளில் டாடா குழுமத்தை சர்வதேச அளவில் மிகவும் முக்கியமான நிறுவனமாக தடம் பதிக்க செய்திருக்கிறார்.

1868ல் டாடா குழுமம் உருவானதில் இருந்து இப்படி ஒரு வளர்ச்சியை அந்நிறுவனம் கண்டதில்லை. இதற்கு முழு முதல் காரணமாக திகழ்ந்தவர். 1991ல் வெறும் 10,000 கோடி ரூபாய் இருந்த விற்றுமுதல், 2011 – 12ல், 100.09 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்தது.

ரத்தன் டாடா இந்திய தொழிற்துறையில் யாரும் கைவைத்திராத புதுமையான முயற்சிகள் பலவற்றை கையாண்டுள்ளார். உதாரணமாக பட்ஜெட் கார் என்ற பெயரில் அறிமுகமான டாடா நானோ காரை சொல்லலாம். இதுதவிர டெட்லியை கையகப்படுத்தி டாடா டீ என மாற்றியது, ஜாகுவார் லேண்ட் ரோவரை வசப்படுத்திய டாடா மோட்டார்ஸ், கோரஸை தங்கள் வசமாக்கி டாடா ஸ்டீலை உருவாக்கியது என லிஸ்ட் நீண்டு கொண்டே செல்கிறது. 2012 டிசம்பர் 28ல் தனது ஓய்வை அறிவித்தார்.

டாடா குழுமத்தின் நிறுவனர் JAMSETJI TATA, கடந்த நூற்றாண்டின் மிகவும் தொண்டு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டு, 829,734 கோடி ரூபாய் நன்கொடை அளித்துள்ளார். இது பில் கேட்ஸ் உட்பட மற்ற உலகளாவிய பரோபகாரர்களின் பங்களிப்புகளை விஞ்சி, இரண்டாவது இடத்தைப் பிடித்தது. டாடா சமூக நலனுக்காக உறுதியளித்தது, நிறுவனத்தின் லாபத்தில் 65% கல்வி, சுகாதாரம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான அறக்கட்டளைகளுக்கு செலுத்துகிறது.

இந்திய தொழிற்துறையின் கடைசி தருணம் வரை ரத்தன் டாடா நிச்சயம் நினைவு கூறப்படுவார்.

தொகுப்பு: பொர்.உ.ராஜேந்திரன் / செயலாளர் வெளியீடு

# கண்ணீர் அஞ்சலி

**பொறியாளர்கள்**

1. 30.09.2024 **பொர்.W.D.அனந்தராமன்**, JE-II / 110KV Sakkottai SS / தஞ்சை கிளை **அவர்கள்.**
2. 08.10.2024 **பொர்.S.தேவிகா** உதவி மின்பொறியாளர் / 110KV SS நாட்ராம்பள்ளி / திருப்பத்தூர் கிளை **அவர்கள்.**

பொறியாளர்களின் மறைவிற்கு பொறியாளர் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளர்களை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

**பொறியாளர்கள் குடும்பத்தினர்**

1. 29.09.2024 அன்று **பொர்.பரணி** உதவி மின்பொறியாளர் GRT / விழுப்புரம் / விழுப்புரம் கிளை அவர்களின் **தந்தையார். 9597275439.**
2. 02.10.2024 அன்று **பொர்.C.சுனிதா பார்வதி** JE-II/110KV / WFSS / அண்ணாநகர் / NCES / திருநெல்வேலி கிளை அவர்களின் **கணவர். 9789725107.**
3. 03.10.2024 அன்று **பொர்.அருணாச்சலம்** / AEE / ELE / EA to SE / ES / NCTPS II / NCTPS கிளை அவர்களின் **தாயார். 9443153536.**
4. 09.10.2024 அன்று **பொர்.C.ஹரிகிருஷ்ணன்** / உதவி பொறியாளர் / இ.பா. / மிட்டூர் / திருபத்தூர் கிளை அவர்களின் **தாயார். 9791969838.**
5. 11.10.2024 அன்று **பொர்.K.பாண்டியன்** / EE / O&M / பொன்னேரி / சென்னை வடக்கு கிளை அவர்களின் **தாயார். 8778522273.**
6. 12.10.2024 அன்று **பொர்.கி.பரமானந்தம்** / AEE Civil TKGTPS / முடுக்கூர் / திருவாரூர் கிளை அவர்களின் **தாயார். 9443153536.**

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

அன்புள்ள பொறியாளர்களுக்கு வணக்கம்

நம்முடைய பொறியாளர் சங்கத்தின் காமதேனு நலநிதி திட்டம் என்பது 1976 இல் 250 ரூபாய் செலுத்தி பத்தாயிரம் ரூபாய் பணப்பயன் என்ற அளவில் தொடங்கப்பட்டது.

படிப்படியாக இதனை முன்னேற்றி தற்பொழுது 2022 ஆண்டு முதல் காமதேனு நலநிதி திட்டம் – VI என்று பத்தாயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தி பணப்பயன் 3000 பேர் இணைந்த பிறகு 3,50,000 என்ற நிலையில் தற்பொழுது செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நம்முடைய பொறியாளர்களின் இறப்பு விகிதம் என்பது வருடத்திற்கு 10 பேருக்கு குறைவாக இருந்தால் மட்டுமே அதற்கு நாம் இந்த வட்டி தொகையை மட்டும் வைத்து அவர்களுக்கு பணப்பயனை வழங்க இயலும் அவ்வாறு இல்லாமல் இறப்பு விகிதம் அதிகமாகும் பட்சத்தில் நாம் நம் முதலீடு தொகையிலிருந்து பணத்தை எடுத்து பணப்பயனாக வழங்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். (இந்த வருடத்திற்கு இந்த மாதம் வரையில் 10 பேருக்கு பணப்பயனை வழங்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்)

ஆதலால் தான் நம்முடைய காமதேனு நலநிதியில்–VI இல் அனைத்து உறுப்பினர்களும் (5,400 பேரும்) இணைய வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறோம். நம்மிடம் வைப்புத் தொகையாக இருக்கும் 4.5 கோடி ரூபாயில் தற்போது நாம் பணிபுரியும் பொறியாளர்களின் பங்காக சுமார் 2.5 கோடி மட்டுமே உள்ளது. இதற்கு 6.5 வட்டி விகிதம் என்ற கணக்கிட்டால் நாம் வருடத்திற்கு 10 பொறியாளர்களுக்கு சுமார் ரூபாய் 160000/– (ஒரு லட்சத்து அறுபது ஆயிரம்) மட்டுமே வழங்க இயலும்.

பொறியாளர்களை இழந்து வாடும் குடும்பங்களுக்கு வாரியத்தில் இருந்தும், காப்பீட்டு நிறுவனங்களிடம் இருந்தும் வருகின்ற பணப் பயன்களுக்கு முன்பாக உடனடியாக நம்முடைய சங்கத்தின் காமதேனு நலநிதி பணப்பயனை வழங்குவதில் சங்கம் பெருமிதம் கொள்கிறது. அதில் உங்களுடைய பங்களிப்பும் இருக்க வேண்டும் என்று சங்கம் விரும்புகிறது.

ஆகையால் இதுவரை இணையாத நம்முடைய உறுப்பினர்கள் அனைவரும் காமதேனு நலநிதி திட்டம்–VI இல் 10 ஆயிரம் ரூபாய் செலுத்தியும், ஏற்கனவே காமதேனு நலநிதி திட்டம்–V இல் உள்ளவர்கள் ரூபாய் 5000/– செலுத்தியும் இணைந்து இந்த திட்டத்தை மேலும் சிறப்பானதாக மாற்றுவதற்கும் தொடர்ந்து சீரிய முறையில் நடைபெறுவதற்கும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க பொறியாளர் சங்கம்! நன்றி!!

பொர்.R.சந்தோஷ் குமார் / செயலாளர் காமதேனு நலநிதி

## பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 30.09.2024 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. Er. M.RANGASAMY AEE / Rural / Chinna Salem / Br. Secy. / Kallakurichi / Kallakurichi Branch. Phone: 9443048362
2. Er. K.KARVANNAN JE I / O&M / Sithalampattu Former Org. Secy. / Villupuram / Villupuram Branch. Phone: 8098557250
3. Er. K.AMBIKAPATHI AE / O&M / Annapannai Former VP / Pudukkottai / Pudukkottai Branch. Phone: 9095632457
4. Er. S.KUMAR JE I / Servalar PH / TGC / Former Jt. Secy. / Kadamparai / Tirunelveli Branch. Phone: 94420 36670
5. Er. R.RAVI EE / Operation / Thatchankurichy / Trichy Branch. Phone: 9443263703
6. Er. P.PRABHAGARAN JE I / Shift / 110 KV Grid SS / Kanchi / Kanchipuram Branch. Phone: 9629684276



# திருமண அழைப்பிதழ்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்கை
பண்பும் பயனும் அது - குறள்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான குரோதி வருடம் காத்திகை மாதம் 6-ம் நாள் (21.11.2024) வியாழக்கிழமை சஷ்டி திதி, பூசம் நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் 4:30 மணிக்குமேல் 6.00 மணிக்குள் துலாம் லக்னத்தில் முருக பெருமானின் அனுகிரகத்துடன்

சேலம் மாவட்டம், மல்லமுப்பம்பட்டி சுந்தர் நகரில் வசித்து வரும்
தெய்வத்திருவாளர்கள், அம்மாசி கவுண்டர் - மாரக்காள் அவர்களின் மகன்வழிப் பேரனும், தெய்வத்திருவாளர்கள், வீராணம் பெரியதம்பி - வள்ளியம்மாள் அவர்களின் மகள்வழிப் பேரனும், திரு.சுந்தரம்-திருமதி.ஜெயக்கொடி ஆகியோரின் புதல்வனுமாகிய திருவளர்ச்செல்வன்

**K.S. அரவிந்தகுமார் (எ) மணிமாறன்** B.E. / CTS, Chennai

என்கின்ற மணமகனுக்கு

சென்னை, மகாகவி பாரதி நகரில் வசித்து வரும்
தெய்வத்திரு.பெ.பூபாலன், நலமுடன் திருமதி.அருள்மணி அவர்களின் மகன்வழிப் பேத்தியும், தாம்பரம் இராமதிலகம் நகரில் வசித்து வரும் திரு.சி.தாமோதரன்-திருமதி.சாந்தி அவர்களின் மகள்வழிப் பேத்தியும், திரு.பூ.கபிலன் - திருமதி.க.லதா ஆகியோரின் புதல்வியுமாகிய திருவளர்ச்செல்வி

**P.K. தாரணி (எ) தீபு** B.E. / TCS, Chennai

என்கின்ற மணமகளை

இல்வாழ்க்கைத் துணைவியாக பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் **சேலம், ஜாகீர் அம்மாபாளையத்தில்** அமைந்துள்ள **காவடி பழனியாண்டவர் திருக்கோவில் சன்னிதானத்தில்** நடைபெற்று அதனை தொடர்ந்து வரவேற்பும் விருந்தும் சுந்தர் நகரில் அமைந்துள்ள **சாந்தி ராதாகிருஷ்ணன் திருமண மாளிகையில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொறியாளர் சங்க உறவுகளே உங்கள் ஒவ்வொருவரையும் நேரில் வந்து அழைத்ததாக கருதி அனைவரும் திருமண விழாவிலும், அதனை தொடர்ந்து சென்னையில் நடைபெறும் விருந்து உபச்சார விழாவிலும் கலந்துக் கொண்டு சிறப்புக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு.பூ.கபிலன்** B.E & **திருமதி.லதா கபிலன்** B.A.
**செயற்பொறியாளர்** / த.நா.மி.வா / தலைமையகம்.

## Reception at Chennai

*We are cordially inviting you to join us in the celebration of uniting of families and the newly wed couple's*

*P.K.Dharani*, B.E / TCS

Weds

*K.S.Aravintha Kumar*, B.E / CTS

(S/o. Mr.A.Sundaram & Mrs. Jayakodi)

**On Wednesday 27th November 2024, 6.30 p.m. Onwards**

at **M.R.Radha Mandram**

(No.84/1, EVK Sampath Road, Periyar Thidal, Vepery, Chennai-7.)

பொர்.பூ.கபிலன் அவர்கள் 'மின் அலை' வளர்ச்சி நிதியாக ரூ.10,001/- அளித்துள்ளார். நன்றி



மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனராக பணியேற்றுள்ள திரு.K.நந்தகுமார், இ.ஆ.ப., அவர்களை சந்தித்து பொறியாளர் சங்கத்தின் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.



மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனராக சிறப்பாக பணிபுரிந்து, நமக்கு பல பதவி உயர்வுகள் வழங்கி, தற்பொழுது பணிமாறுதலில், பேரிடர் மேலாண்மை துறையின் ஆணையராக பணியேற்றுள்ள திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்களுக்கு பொறியாளர் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam